நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 06 ஞாயிற்றுக்கிழமை (22-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 292

# அதிகாரி உட்பட 12 படையினர் வாகனேரி தாக்குதலில் பலி!

## ஆயுதத் தளபாடங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 22

வாகனேரிப் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அதிகாரி ஒருவர் உட்பட 12 படையினர் உயிரிழந்தனர். அவர்களது ஆயுதத் தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மட்டக்களப்பு மாவட்டம், வாகனேரியில் — கொழும்பு பிரதான வீதியால் நேற்று முன்தினம் (வெள்ளி) காலை 8 மணியளவில் ஜீப்களில் ரோந்து சென்ற ஸ்ரீலங்காப் படையினர் மீதே விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:—

★ ஏ. கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி — 1

★ அதற்குரிய ரவைக் கூடுகள் — 5

★ தொடர் ரவைகள் — 450

★ ரி 56 - 2 ரக துப்பாக்கி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மனித உரிமை மீறல்:
## இலங்கைக்கான நிதியுதவி; நெதர்லாந்து நிறுத்தம்

இலங்கைக்கான அபிவிருத்தி நிதி உதவிகளை நெதர்லாந்து அரசு திடீரென நிறுத்திவிட்டது.

மனித உரிமைகள் தொடர்பான இலங்கை அரசின் கொள்கைகளை தமது அரசு அங்கீகரிக்கவில்லை என்பதாலேயே நிதியுதவி நிறுத்தப்படுகிறது என நெதர்லாந்து வளர்ச்சித்துறை அமைச்சர் ஜன் புரோங்க் தெரிவித்துள்ளார்.

பிலிப்பீன்ஸ், சூடான் ஆகிய நாடுகளுக்கான நிதியுதவியும் நெதர்லாந்து அரசினால் நிறுத்தப்பட்டுள்ளது. [ஒ-10]

## பள்ளித்திடலில் மோதல்

யாழ்ப்பாணம், செப். 22

மட்டக்களப்பு, பள்ளித்திடலில் ரோந்து சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடந்த புதன்று திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

புலிகளின் தீவிர தாக்குதலை அடுத்து படையினர் இழப்புகளுடன் முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் லெப்டினன்ட் பல்லவன் [மட்டக்களப்பு], நிமல்ராஜ் [அம்பாறை] ஆகிய இரு வீரவேங்கைகளும், விடுதலைப் புலிகள் இயக்க உதவியாளரான அருளம் என்பவரும் வீரமரணமடைந்தனர். [ஒ]

## ஆபத்து நிலையில் பிரேமா; அவரே சொல்கிறார்!

தாம் அரசியல் ஆபத்து நிலையை எதிர் நோக்கியிருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகப் பெண்கள் அமைப்பின் கூட்டத்தை நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் அரசு மிகவும் உறுதியாக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

அரசாங்கம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து வருகிறது. அதே சமயம், நாட்டின் நலனுக்காக எந்தச் சவாலையும் தாம் எதிர்நோக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். [ஒ-எ]

## பிரேமாவுக்கு ஆதரவு குன்றிவரும் நிலை!

கொழும்பு, செப். 22

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான அதிருப்தியாளர்களின் கை ஓங்கி வருவதாகவும் பிரேமாவின் ஆதரவு குறைந்து வருவதாகவும் கொழும்பு ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

அதிருப்தியாளர் குழுவினர் நேற்றுமுன்தினம் கண்டியில் நடத்திய பொதுக் கூட்டம் ஒன்றில் நூற்றுக் கணக்கான பௌத்த பிக்குகள் உட்பட 30 ஆயிரம் பொதுமக்கள் பங்குபற்றினர்.

இந்தக் கூட்டத்தின் மேடையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற கலைப்பை தடை செய்யுமாறு மனு
### உயர்நீதிமன்றில் தாக்கலாகும்

கொழும்பு, செப். 22

நாடாளுமன்றை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கலைப்பதை தடுக்கும் இடைக்கால தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கக் கோரும் மனு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் முயன்று வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன;

இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் சட்ட வல்லுநர் குழு முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக சுதந்திரக் கட்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கடற்படையினர் கொடுமையால் கடலில் குதித்த இந்தியமீனவர்!
### 17 பேர் நெடுந்தீவுக் கரை சேர்ந்தனர்

நெடுந்தீவு, செப். 22

தமிழ்நாடு கோட்டைப் பட்டணத்தைச் சேர்ந்த பதினேழு மீனவர்கள் நெடுந்தீவுக் கரையை வந்தடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா கடற்படையினரின் கொடுமை காரணமாக அவர்கள் பல மைல் தூரத்தை நீந்தி வந்ததாகவும், அவர்கள் பயணம் செய்த நான்கு இயந்திரப் படகுகள் எங்கே என்பது தெரியவில்லை என்றும் அறிய வந்தது.

சம்பந்தப்பட்ட 17 மீனவர்களும் நான்கு இயந்திரப் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, ஸ்ரீலங்கா கடற்படைப் படகு ஒன்று துரத்தியது.

அவர்களை வழி மறித்த கடற்படையினர், மீனவர்களைக் கடலில் குதிக்குமாறும், இல்லையேல் சுடப்போவதாகவும் பயமுறுத்தினர். உயிருக்குப் பயந்து கடலில் குதித்த மீனவர்கள் நீந்தத் தெரிந்ததினால் பெரும் சிரமத்துடன் நெடுந்தீவுக் கரை சேர்ந்தனர். (ஆ-111)

## குடும்பஸ்தர் கோரக் கொலை! வீடுகள், கடைகளில் சூறை!!
### ஆழியவளையில் படையினர் வெறியாட்டம்!!!

தாளையடி, செப். 22

வெற்றிலைக்கேணிப் படைமுகாமில் இருந்து நேற்று முன்தினம் (வெள்ளி) ஆழியவளைப் பகுதிக்கு வந்த படையினர் அங்கு பெரும் வெறியாட்டம் நடத்திவிட்டுச் சென்றனர்.

குடும்பஸ்தர் ஒருவரைப் படையினர் கோரமாக வெட்டியும் பின்னர் துப்பாக்கியால் சுட்டும் கொன்றுள்ளனர். வீடுகள், கடைகள் என்பன சூறையாடப்பட்டுள்ளன.

சுப்பிரமணியம் நாகேஸ்வரன் (40 வயது) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே கொலையுண்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

இராணுவ நடவடிக்கையை அடுத்து இடம்பெயர்ந்து நாகர்கோவிலில் குடும்பத்துடன் வாழ்ந்து வரும் சுப்பிரமணியம் நாகேஸ்வரன், வெள்ளிக்கிழமை தனது மனைவி, மற்றும் மாமனாருடன் சைக்கிளில் ஆழியவளைக்கு தமது வீட்டைப் பார்க்கச் சென்றிருந்தார்.

அங்கு படையினர் இவர்கள் மூவரையும் பிடித்து, பின்னர் அவரது மனைவியையும், மாமனாரையும் மிரட்டி அனுப்பி விட்டனர்.

சில மணி நேரத்தின் பின்னர் சுப்பிரமணியம் நாகேஸ்வரன் அங்கிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

வெட்டுக் காயங்களினாலும், துப்பாக்கிச் சூட்டினாலும், சடலம் சிதைவுற்றிருந்தது.

சடலத்தை பொதுமக்கள் சிலர் நாகர்கோவிலுக்கு எடுத்து வந்தனர். (ஒ-144)

## தமிழீழ மீட்பு நிதி

யாழ்ப்பாணம், செப். 22

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிவோரிடம், தமிழீழ மீட்பு நிதி திரட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை (28 ஆம் திகதி) காலை 8 மணிக்கும் முற்பகல் 10-30 மணிக்கும் இடையில் ... சம்பலரயில் மீட்பு நிதியைச் செலுத்தலாம். (ஒ)

## முச்சந்தி முரளி



... ஆபத்து புரியுது போலை...!

## புலிகள் ஆதரவு மாநாடு; கரூரில் 250 பேர் கைது!

சென்னை, செப். 22

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டியதாகவும் ஆதரவுக் கூட்டங்களை நடத்தியதாகவும் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றும் நேற்று முன்தினமும் 386 பேர் கைது செய்யப்பட்டனர்.

பெரியார், திண்டுக்கல், அண்ணா, தென் ஆற்காடு, தர்மபுரி, திருச்சி, திருநெல்வேலி கட்டபொம்மன், சேலம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, வட ஆற்காடு, நீலகிரி, சென்னை ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் 136 பேர் கைதாகினர்.

தர்மபுரி மாவட்டம் கரூரில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மாநாடு நடத்த இருந்த புரட்சிகர இளைஞர் அணி, மற்றும் மாணவர் அமைப்பைச் சேர்ந்த 250 பேர் நேற்று கைதாகினர்.

நேற்று நடத்த இருந்த அந்த மாநாடு தடை செய்யப்பட்டதாகவும் பொலிஸார் அறிவித்தனர். (ஒ-எ-த)

## தமிழகத்தில் புலிகள் தாக்குதல் நடத்தலாமாம்

சென்னை, செப். 22

தமிழகத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் போராளிகளை மீட்டெடுப்பதற்காக விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல்களை நடத்தக்கூடும்.

— இவ்வாறு இந்திய பாதுகாப்பு புலனாய்வுத் துறையினர் கருதுவதாக "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து, கைது செய்யப்பட்ட போராளிகளைத் தடுத்து வைத்திருக்கும் பூந்தமல்லி, செங்கற்பட்டு புறநகர் சிறைகளுக்குத் தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் அச்செய்தி தெரிவித்தது. [உ-10]

## ஜி. சீ. ஈ. விசேட பரீட்சை: முடிவு இன்று தெரியவரும்?

அண்மையில் நடைபெற்ற —1990 ஆம் ஆண்டுக்குரிய— ஜி. சீ. ஈ. (உயர்தர) விசேட பரீட்சை முடிவுகள் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. பெரும்பாலும் முடிவுகள் இன்று யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது;

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத்தகவலை நேற்று வெளியிட்டார்;

வவுனியாவுக்கு வந்து சேர்ந்துள்ள பரீட்சை முடிவுகள் கல்வித் திணைக்கள ஊழியர் ஒருவரால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுவதாக

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 'தராசு' அலுவலக தாக்குதல்; அமைச்சர்கள் சம்பந்தம்?

சென்னை, செப். 22

சென்னையில் உள்ள "தராசு" வார இதழ் அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் அ. தி. மு. கவைச் சேர்ந்த இரு அமைச்சர்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று இப்போது சந்தேகிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபர்களில் ஒருவரும் தமிழகத்தின் முன்னாள் உள்துறைச் செயலாளருமான திரு. நாகராஜவின் சார்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனு ஒன்றில் அ. தி. மு. க. அமைச்சர்களின் தொடர்பு பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான பொக்ஸர் வடிவேலு என்பவர் அ. தி. மு. க. அமைச்சர்களான மதுசூதனன், ஜெயக்குமார் ஆகியோரின் தீவிர ஆதரவாளர் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கடத்தல் முயற்சி முறியடிப்பு:
## கட்டுநாயக்காவில் நேற்று 27 கிலோ தங்கம் பறிமுதல்

கொழும்பு, செப். 22

டுபாயில் இருந்து இந்திய கடவுச் சீட்டுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய பயணி ஒருவரிடமிருந்து ஒரு கோடி 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் காலை கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது

அவரிடமிருந்த விசேடமாக தைக்கப்பட்ட 'ஷேர்ட்' உடையினுள் 192 தங்க பிஸ்கட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அத்தங்கத்தின் மொத்த எடை 27.5 கிலோ என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பயணிக்கு 3 கோடி 90 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படலாம் என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்கத் திணைக்களத்தால் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய தங்கக் கடத்தல் இது என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தட்டச்சு இயந்திரம் ரெமிங்டன் இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [18214]

### தேவை

பாவித்த ஸ்பிறிங் மெத்தைகள், ஆர்பிக்கோ சேஸ்ரா மெத்தைகள், பாவித்த மரத்தளபாடங்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்படும். ஸ்பிறிங் வகைகள் தனியாகவும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். இல. 234, K. K. S வீதி, யாழ்ப்பாணம் M/S [வைத்திலிங்கம் & கம்பனிக்கு அருகாமையில்] காலை 9-00 மணி தொடக்கம், 2-00 மணி வரை. [18216]

தமிழ் தட்டெழுத்தாளர் உடனடியாகத் தேவை. ஆங்கிலத் தட்டெழுத்தும் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: செயலாளர், வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம், 15, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. [18218]

### உடன் தேவை

தையல் நிறுவனம் ஒன்றிற்கு Partner ஆகவும், ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டித்தைக்கக் கூடியவராகவும் உள்ளவர் தேவை. சலுகைகள் வழங்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 349, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18184]

### வகுப்புகள்

Typing Short - Hand வகுப்புகள் வார, வார இறுதிகளில் இரு பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும். Bond Institutes 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4287]

### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [4294]

### அம்பாள் திருமண சேவை

31 வயது சைவம் I C.M.A Accountant க்கும் 30 வயது சைவம் Electronic Engineer க்கும், 28 வயது M Sc. Computer க்கும் பட்டதாரி மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா. 50/-. சின்னச்சாமிக்குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [17930]

### சோதிடம்

உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்கள், கஷ்டங்கள், கடன், தோஷங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். நேரில் வரவும் ஸ்ரீ சக்தி கணேச உபாசகர் ஸ்ரீ மகாலிங்கம் "சோதிட நிலையம்" 146 பருத்தித்துறை றோட், [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி] நல்லூர். (18195)


## ★ அமெரிக்க இலங்கை மிஷன் 175 ஆண்டு நிறைவு விழா ★

# வடக்கு உயர்வதற்கு வழி வகுத்த அமெரிக்க மிஷனரிமாரின் வருகை

## சகல துறைகளிலும் அளப்பரிய சேவைகள்

1816 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி அமெரிக்க மிஷனரிமார் இலங்கையில் காலடி எடுத்து வைத்தனர். இந்த வருடம் இந்தத் தொண்டர் அணியின் 175 ஆண்டு சேவை பூர்த்தியாகின்றது. இதனை நன்றியுணர்வுடன் நினைவுகூரும் வண்ணமாக யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் விசேட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தவர் இன்று குடியேறி வாழும் கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் இதற்கான விழாக்களும், நன்றி செலுத்தும் வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே பல்வேறு புரட்டஸ்தாந்து மதத்தவர்கள் இலங்கையிலே பணியாற்றினார்களெனினும், அமெரிக்க மிஷனுக்கும் யாழ்ப்பாணத்தவருக்குமிடையிலேயே விசேட உறவு இருக்கின்றது.

அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்திலே மட்டும் பணியாற்றினர். இதனால் இலங்கையில் அமெரிக்க மிஷன் கிறிஸ்தவர்கள் அனைவரும் தமிழ் மக்களாகவே இருக்கின்றனர். 1947 இல் அமெரிக்கஇலங்கை மிஷனின், தென்னிந்திய திருச்சபையில் ஒரு மறை மாவட்டமாக இணைந்து கொண்டது. இதனாலே தென்னிந்திய திருச்சபை யாழ். மறைமாவட்டம் அமெரிக்க இலங்கை மிஷனின் 175 ஆவது நிறைவினைக் கொண்டாடி மகிழ்கின்றது.

நமது பிரதேசத்துக்குக் கல்விப்புச் செய்த இயக்கமாகவும் அமெரிக்க மிஷன் இருந்ததே ஆகும்.

### பல்கலைக்கழக இயக்கம்

அமெரிக்க மிஷன், அமெரிக்காவிலிருந்த கொங்கிரேஷனலிஸ்ட் [Congregationalist] திருச்சபையார் மத்தியில் முகிழ்த்த மறுமலர்ச்சி



சகல திட்டங்களையும் நெறிப்படுத்தி இயக்கி வரும் தென்னிந்திய திருச்சபையின் தற்போதைய பேராயர் டி. ஜே. அம்பலவாணர்.

இயக்கமாகும். இது மசாசுசெற்ஸ் மாநிலத்தில் இருந்த வில்லியம்ஸ் பல்கலைக்கழகக் கல்லூரியிலேயே உதயமானது. அன்று தொட்டு இன்று வரை அமெரிக்க பல்கலைக்கழகங்களிலிருந்து இதன் தொண்டர்கள், மிஷனரிமாராக வந்தனர். எனவே கல்விச்சிந்தனை, யத் தொண்டர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து விட்டனர். புதிய நாட்டின் தன்னம்பிக்கை, சாதனை வேட்கை, துணிவு, எல்லையற்ற உழைப்பு என்பன இந்த மிஷனில் பரந்து காணப்பட்டன.

அமெரிக்க மிஷனரிமார் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினார்கள் என்பதனைவிட ஒரு புதிய நாட்டின் விழுமியங்களைப் பரப்பினார்கள் என்பதே பொருத்தமானது என்று ஒரு வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்க மிஷனரிமார் அமெரிக்க ஜனாதிபதி தொமஸ் ஜெபர்ஸன் என்பாரது கொள்கையை உறுதியாகப் பற்றியிருந்தனர். "கல்வியே எல்லாவிதமான முன்னேற்றத்திற்கும் திறவுகோல் (Education is the only avenue to all kinds of progress) என்பது ஜெபர்ஸனின் தலையாய சிந்தனை. புதிய நாட்டின் நூற்பண்பாடு, பத்திரிகைப்பணி, சமயபக்தி, விஞ்ஞான விருத்தி, மருத்துவச்சேவை, எல்லாமே அமெரிக்க மிஷன் என்ற வாய்க்கால் வழியாகச் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

### தூய்மைவாதிகளின் இயக்கம்

அமெரிக்க மிஷனரிமார் தூய்மைவாதிகள் எனப்படும் அதி தீவிர புரட்டஸ்தாந்து வாதிகள். எனவே அவர்கள் வலியுறுத்திய கருத்துக்கள் யாவற்றிலும் இதன் தாக்கம் காணப்படுகின்றது. விக்கிரக வழிபாடு, மதுப்பழக்கம், மோட்சம், எரிநரகம், ஞாயிறு ஆசரிப்பு, உண்மை பேசுதல், பற்றுறுதி என்பன குறித்தே அவர்கள் பெருமளவு எழுதினார்கள். பெருமளவு பேசினார்கள். அவர்களுடைய கலாசாரத்தை 'மோட்ச பிரயாணி' கலாசாரம் எனலாம். ஜோன் பன்யன் அவர்களால் 'மோட்ச பிரயாணி' எழுதப்பட்டது. இதன் ஆங்கில மூலம் Pilgrims Progress என்பதாகும்.

### பெண்கள் பங்கு

மிஷனரிமாரின் துணைவியர் பலரும் யாழ்ப்பாணத்தில் வந்து அரும்பணியாற்றினர். C. P. சிந்தமணி என்னும் வரலாற்றாசிரியர் உலகில் முதன் முதலாக வெள்ளைக்காரப் பெண்கள், வெள்ளையர் அல்லாதவர்களுக்கு கற்பித்த நிலையை யாழ்ப்பாணத்திலே தான் காண்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். பெண்களின் மூலமாக சமுதாயத்தையே மாற்றியமைக்க முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்பினர். 'ஆறு ஆண்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்குவதிலும் ஒரு பெண்ணைக் கிறிஸ்தவள் ஆக்குவது மேல்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதனாலே தான் தமது உயிருக்கு ஆபத்து வந்த சூழலிலும் கூட, பெண் கல்வியை இலக்காக ஈடுபட்டனர். 1824 இல் உடுவில் மகளிர் கல்லூரி உதயமானது. இதுவே ஆசியாவில் தோன்றிய முதலாவது பெண்கள் கல்லூரி. இங்கு கற்ற மாணவிகள் நல்லூரிலும், யாழ்ப்பாணத்திலும் பெண்கள் கல்லூரிகளை நிறுவினர். இங்கு கற்று அரங்கேறிய ஆன் மான் (Anne Mann) என்னும் மாணவி சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இராமநாதபுரம் அரசிளங்குமாரிக்கு கல்வி கற்பிக்க நியமிக்கப்பட்டார். அமெரிக்க மிஷனரிமாரின் கல்விப்பணி பற்றி இரண்டு முக்கிய சிந்தனையாளர்கள் கூறிய கருத்துக்களை ஈண்டு குறிப்பிடலாம்.

"இந்த யாழ்ப்பாணத்துக்கேயுரிய இலக்கண, இலக்கிய செம்பாட்டு மரபுகளுடன், அமெரிக்காவில் தொடங்கி வட்டுக்கோட்டையில் கொப்புளித்துப் பாய்ந்த, சுதேசமயமாக்கப்பட்ட ஒரு பாரம்பரியமும், கொழும்பில் மறுதலித்துப் பேராதனையில் ஓடிய, இலங்கை முழுவதற்கும் பொதுவான ஒரு தேசிய ஆராய்ச்சிப் பாரம்பரியமும் இணைந்த பொழுது தான் யாழ்ப்பாணமே பல்கலைக்கழகமாயிற்று."

—பேராசிரியர் கா. சிவத்தம்பி

"அமெரிக்கன் மிஷனரிமார் பல வகைகளில் தேங்கிக் கிடந்த தமிழ்க் கல்வி உலகிலே புதுமை வேட்கையையும், திறனாய்வு நோக்கினையும், பரந்த மனப்பான்மையையும் புகுத்திக் கல்வித்துறையின் புதுயுகத்தின் தலைவாயிலிற் தமிழ் மக்களைக் கொணர்ந்து நிறுத்தினார்கள்."

— பேராசிரியர் சு. வித்தியானந்தன்.


வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
[முதல்வர் - யாழ்ப்பாணக்கல்லூரி]

இடைத்த நன்மைகளில் அமெரிக்க மிஷனரிமாரின் வருகையும் ஒன்று என்பதனை இன்று பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அமெரிக்க மிஷனரிமாரின் சமயதம் பிக்கைகளும், இத்தகைய போக்குகளும் சமுதாய மக்களின் சமயம், தத்துவம், அறிவு வளர்ச்சி, பொருளியல் வளர்ச்சி என்பனவற்றில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தன.

இதற்குக் காரணம் ஒரு பல்கலைக்கழக இயக்கமாகவும், புத்தம்புதிய நாடொன்றின் இயக்கமாகவும் தூய்மைவாதிகளின் இயக்கமாகவும், பெண்கள் பெருமளவு பங்கு குறிப்பாக உயர் கல்விச் சிந்தனை அவர்கள் செயற்றிட்டங்கள் யாவற்றிலும் இழையோடியிருந்தன.

1816 இல் தெல்லிப்பளையில் காலடி எடுத்து வைத்த டானியல் பூவர் என்னும் அமெரிக்க மிஷனரி முதன்முதலாகத் தமிழ்ப்பள்ளிகளை தெல்லிப்பளையிலும், மல்லாகத்திலும் அமைத்தார். பின்னர் விடுதிப்பாடசாலைகள் உருவாகின. 1823 இல் வட்டுக்கோட்டையில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியையே அமெரிக்க மிஷனரிமார் நிறுவி விட்டனர்.

அமெரிக்கா 1776 இல் சுதந்திரமடைந்தது. நாற்பது வருடங்களுக்குள் அதன் சம



1620 இல் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு பின்னர் ஒல்லாந்தரால் புனரமைக்கப்பட்ட தற்போதைய வட்டுக்கோட்டைப் பேராலயத்தின் 1816 ஆம் ஆண்டுத் தோற்றம்.

### வரலாற்றிலே பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வுகள்

1816 — தமிழ்ப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படல்.
1820 — முதலாவது ஆங்கில வைத்தியசாலை பண்டத்தரிப்பில் நிறுவப்படல்.
1823 — வட்டுக்கோட்டை செமினரி என்னும் பல்கலைக்கழகக் கல்லூரி உதயம்.
1824 — உடுவிலில் பெண்களுக்கான ஓர் உயர்தர பாடசாலை நிறுவப்படல்.
1834 — மானிப்பாயில் அச்சியந்திரசாலை அமைக்கப்படல்.
1835 — வட்டுக்கோட்டையில் நிழற்படம் (Photo Graph) எடுக்கப்படல்.
1841 — 'உதயதாரகை' என்னும் வாரப்பத்திரிகையின் தோற்றம்.
1842 — மானிப்பாய் அகராதி என்னும் தமிழகராதி பிரசுரம்.
1848 — டாக்டர் கிறீனினால் மானிப்பாயில் வைத்தியசாலையும், மருத்துவக்கல்லூரியும் நிறுவப்படல்.
1863 — வின்சிலோர் தமிழ்-ஆங்கில அகராதி பிரசுரம்.
1898 — இணுவிலில் பெண்களுக்கென ஒரு தனியான வைத்தியசாலை நிறுவப்படல்.



★

1848 இல் டாக்டர் கிறீன் அவர்களால் மானிப்பாயில் தொடக்கப்பட்ட வடமாகாணத்தின் முதலாவது வைத்தியசாலை.

★

### தற்போது நடைமுறையில் இருப்பவை

தென்னிந்திய திருச்சபை-யாழ். பேராயத்தினால் தற்போது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப் படுத்தப்படுபவை.

★ பகல் பராமரிப்பு நிலையங்கள் - 58
★ கல்விக் கூடங்கள் - 2
★ மருத்துவ சாலைகள் -3
★ தொழில் நுட்பக் கல்லூரி - 1
★ விவசாயக் கல்லூரி - 1
★ தொழில் கல்வி நிலையங்கள் - 7
★ இறையியற் கல்லூரி - 1
★ பிள்ளைகளின் இல்லங்கள் - 9
★ வலது குறைந்த பிள்ளைகள் இல்லம் - 1

இவற்றுடன் வீடமைப்புத் திட்டங்கள், சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள், சமூக அபிவிருத்திப் பணிகள் ஆகியவையும் அடங்கும்.



பெண்களுக்கான முதலாவது பாடசாலையை உடுவிலில் ஆரம்பித்த ஹரியற் வின்சிலோ அம்மையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கடனா? சன்மானமா?

சர்வதேச நாணய நிதியம், ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு இரண்டாயிரம் கோடி ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது. அதிகரிக்கப்பட்ட கட்டமைப்பு வசதி நிதி உதவித் [ஈ. எவ். ஏ. எவ்.] திட்டத்தின் கீழ் இந்தப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. உலக வங்கியின் அங்கீகாரத்துடனேயே இந்தப் பெருந்த கடன் உதவி கிடைத்துள்ளது.

ஸ்ரீலங்காவுக்கு இதுவரை சர்வதேச நிதி நிறுவனங்களும், உதவி வழங்கும் நாடுகளும் வழங்கிய கடன் தொகைகளில் இதுவே ஆகக் கூடியதாகும் என்று நிதி அமைச்சு மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது!

எந்தக் காலத்திலும் இல்லாதவாறாக, இன்னின்ன திட்டங்களுக்கு என்று பெயர் குறிப்பிட்டு ஒதுக்காமல், ஒரே மொத்தமாக — பொதுப்படையாக—நாணய சபை இந்தக் கடனை வழங்கியிருக்கிறது.

கடந்த இரண்டு வருட கால ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், அதனை அங்கீகரித்துமே இத்தனை விசேட சலுகைகளையும், கவனிப்புகளையும் நாணய சபை செய்திருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் பெருமை பேசியுள்ளன.

உலக வங்கியும், நாணய சபையும் விதித்த நிபந்தனைகளையும், பொருளாதார மாற்றங்களையும் அனுவளவும் பிசகாது சிரமேற் கொண்டு அரசு நிறைவேற்றியதற்கான சன்மானம் என்றே இதனைக் கொள்ள வேண்டும். அடிவருடித்தனத்திற்குக் கிடைத்த பரிசு என்றும் சொல்லலாம்.

அமெரிக்காவின் கைப்பொம்மைகளாக இயங்கும் உலக வங்கியும், நாணய சபையும் சேர்ந்து இந்தளவு பெரிய தொகையைக் கடனாக வழங்குவது என்பது, ஸ்ரீலங்கா அரசு அமெரிக்காவை சகல வழிகளிலும் திருப்திப்படுத்தி இருக்கிறது என்பதற்கான சான்றிதழே.

ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகள் குழு, மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் ஸ்ரீலங்காவுக்குக் கடன் வழங்குவதற்கு மனித உரிமைகளைப் பேண வேண்டும் என்று அழுத்தம் போட்டுள்ளன.

மனித உரிமை மீறல்கள் ஸ்ரீலங்காவில் மலிந்துள்ளதாகக் காரணம் காட்டி, நெதர்லாந்து தான் வழங்கும் அபிவிருத்தி நிதி உதவியை நிறுத்தியுள்ளது. நெதர்லாந்து தனது தேசிய மொத்த உற்பத்தியில் 1.5 வீதத்தை மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கவென்று ஒதுக்கியுள்ள நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் நாணய சபை அரசின் அரசியற் கொடுமைகளை கவனத்திற் கொள்ளாமல் மிகப் பெருந்தொகைப் பணத்தைக் கடனாக வழங்கி இருக்கிறது!

ஸ்ரீலங்கா தமது தாசனாக இருந்து, தனியார் மயம், மக்கள் மயம், இயந்திர மயம், வெளிநாட்டார் மூலதனம் என்ற பெயரில் உழைப்புச் சுரண்டல் ஆகிய கொள்கைகளைக் கண்ணை மூடிக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு கைமாறாக இக்கடனை உலக வங்கியின் அனுசரணையுடன் நாணயசபை வழங்கியிருக்கிறது.

பெயர் குறிப்பிட்டு ஒதுக்காமல் வழங்கப்பட்ட கடன் தமிழர்களை அழிப்பதற்கு ஆயுத தளபாடங்கள் வாங்குவதற்கு மறைமுகமாக வழங்கப்பட்ட நிதி உதவியாகக் கூட இருக்கலாம்! யார் கண்டார்?

## திலீபன் நினைவுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 22

தியாகி திலீபன் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு குடாநாட்டில் இன்று பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

★ வலிகாமம் பகுதிக்கான கூட்டம்— உடுவில் மருதனார் மடம் சந்தை மைதானத்தில் இரவு 7 மணிக்கு.

★ தீவகப் பகுதிக்கான கூட்டம் — புங்குடுதீவு - மத்தி சனிஸ்டார் விளையாட்டு மைதானத்தில் மாலை 6.30 மணிக்கு.

★ வடமராட்சிப் பகுதிக்கான கூட்டம்- நாகர்கோவில் வடக்கு முருகன் ஆலய வீதியில் பிற்பகல் 2 மணிக்கும் அம்பன் பிள்ளையார் கோவிலில் பிற்பகல் 3 மணிக்கும்.

★ தென்மராட்சிப் பகுதிக்கான கூட்டம் — சாவகச்சேரி சிவன் கோவிலடியில் இரவு 8 மணிக்கு. [த]

### இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், செப். 22

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை இலட்சார்ச்சனைப் பெருவிழா நடைபெறும். அதிகாலை 4-30 மணிக்குப் பூசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். [த]

### இன்று தேர்

யாழ்ப்பாணம், செப் 22

நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மஹோற்சவத்தில் நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும். [அ-5]

### கடையிற் சுவாமி நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமிகள் நூற்றாண்டு விழாவும், அன்னதானமும், கடையிற்சுவாமி சமாதிச் சிவன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமையும், நாளையும் நடைபெறும். [த]

### சிரமதானம்

யாழ்ப்பாணம், செப். 22

வடமாகாணத்தைச் சேர்ந்த சாரணர்கள் தியாகி திலீபனின் ஞாபகார்த்தமாக சிரமதானம் ஒன்றை நாளை திங்கட்கிழமை காலை 7-45 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளவுள்ளனர். [த]

### சிமெந்து ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 22

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன நிலைமை குறித்து ஆராய்வதற்கான, அவசர விசேட கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெற இருக்கும் இந்தக் விசேட கூட்டத்தில் சகல ஊழியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். கூட்டத்தில் வரவு பதிவு செய்யப்படும் என்று நிர்வாக முகாமையாளர் தெரிவித்தார். [அ]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 22

மணலாறு மாவட்டத்தில் நடந்து வரும் மோதலில் நேற்று முன்தினம் சூரியா (யோகேஸ்வரி அம்பலவாணப் பிள்ளை — மூதூர்) என்ற பெண் போராளி வீரமரணமடைந்தார். [ஒ]

### பொலீஸிலிருந்து ஈழ இளைஞர் ஓட்டம்

சென்னையில் பொலீஸ் காவலிலிருந்து இலங்கைத் தமிழ் இளைஞரான உதயகுமார் (வயது 25) என்பவர் தப்பி ஓடிவிட்டார் என்று செங்கல்பட்டு பொலீஸார் தெரிவித்தனர்.

### சென்னையிலும் தங்கக் கடத்தல் முறியடிப்பு

சென்னை, செப். 22

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கிய ஒரு பயணியிடம் இருந்து சுமார் ஒன்றே முக்கால் கோடி ரூபா பெறுமதியுள்ள தங்கத்தை சுங்க அதிகாரிகள் நேற்றுக் கைப்பற்றினர்.

அந்தப் பயணி தமது சூட்கேஸின் அடியில் தங்கத்தை மறைத்து வைத்திருந்தார் என்று அறிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### பிரேமாவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமொரு எம். பியும் காணப்பட்டார். இவருடன் சேர்த்து ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவிற்கு ஆதரவாக தங்களைப் பகிரங்கப் படுத்திக் காட்டிய எம். பிக்களின் எண்ணிக்கை பதினொன்றாக உயர்ந்தது.

ஆளும் கட்சியின் மேலும் பல எம். பிக்கள் அதிருப்தியாளர் பக்கம் சாயலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

கொழும்பில் பௌத்த பிக்குகள் நேற்று முன்தினம் கூட்டிய கூட்டத்தில் ஒன்று தற்போதைய அரசியல் நெருக்கடி பற்றி ஆராய விருந்த வேளையில் நிறுத்தப் பட்டது.

அந்தக் கூட்டத்தில் பேசுவதற்கு தங்களுக்கு சந்தர்ப்பம் தராததைக் கண்டித்து சுமார் 50 பௌத்த பிக்குகள் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். அதனையடுத்தே கூட்டம் தடைப்பட்டது.

இந்தச் சம்பவம் பிரேமதாஸாவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக பௌத்த பிக்குகள் மத்தியில் பெரும் கருத்துவேறுபாடு இருப்பதை புலப்படுத்துகிறது என்று இந்திய வானொலி தெரிவித்தது. [உ-த-5]

### தியாகத் தேன்: 8

எட்டாம் நாளில் — உடல்
தொட்டதும் சுருண்டது...
கண்களிரண்டும்
கடுமிரவாக இருண்டது...
வரண்ட நாவில்
வார்த்தைகள் புரண்டன...
மருண்ட குயிலொன்று
பாட மறந்து
மண்ணிலே உருண்டது!

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபன் நினைவாக)

### 5 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனமாவர்

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்க. 5 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கான அனுமதியைத் திட்டமிடல் அமைச்சு, கல்வி ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளது.

புதிய ஆசிரியர்கள் அடுத்த ஆண்டு முதல் பாடசாலைகளில் நியமிக்கப்படுவர்.

போட்டிப் பரீட்சை மூலம் இந்த நியமனங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)

### ஜி. சீ. ஈ. ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை முடிவுகள் இன்று யாழ் திணைக்களத்துக்குக் கிடைத்ததும் அவை உடனடியாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [உ-3]

### அதிகாரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் — 6

★ அவற்றிற்குரிய ரவைகூடுகள் — 14

★ ரி 81 ரக துப்பாக்கிகள் — 3

★ அவற்றிற்குரிய ரவைக் கூடுகள் — 11

★ ஜே. ஆர். ரக கைக் குண்டுகள் — 4

★ புகைக்குண்டு — 1

★ நடுத்தர ரவைகள் – 575

இதேவேளை—

வாகனேரியில் இராணுவத்தினரின் இரண்டு வாகனங்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; மூவர் படுகாயமடைந்தனர் என்று கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-எ)

### நாடாளு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிப் பிரமுகர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்று தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அது பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்படும் வரை, நாடாளுமன்றை ஜனாதிபதி கலைப்பதை அரசமைப்பு தடை செய்திருப்பதாக சபாநாயகர் அறிவித்திருக்கிறார்.

ஆனால் மேற்படி பிரேரணை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுவதற்கு முன்னரே நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி தாம் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுவிட்டதால், பிரேரணை காலாவதியாகிவிட்டது என்றும்—

அதனால் நாடாளுமன்றை தாம் கலைப்பதை எந்தச் சட்ட விதிகளும் தடைசெய்ய முடியாது என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா கூறி வருகிறார்.

இந்த நிலையில்—

ஜனாதிபதி 'நாடாளுமன்றைக் கலைக்க முற்படுவதைத் தடுக்கும் தற்காப்பு நடவடிக்கையாக உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்ய எதிர்க்கட்சிகள் முயன்று வருகின்றன

இதுபற்றி திரு. லலித் அத்துலத்முதலியிடம் கேட்ட போது—

"அரசமைப்புக்கு முரணான முறையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், அது கலைக்கப்பட்ட பின்னரும் அந்த நடவடிக்கையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் மனுச் செய்யலாம்.

மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுத் தீர்ப்பளித்தால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் சட்டரீதியாகக் கூடும்"—என்று சொன்னார். (உ-த)

#### திலீபன் நினைவு வாரத்தில்

## பாடசாலைகளில் நூலகங்கள் நிறுவுமாறு கோரிக்கை

தியாகி திலீபனின் 4 வது ஆண்டு நினைவு வாரத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நூல் நிலையங்களை ஆரம்பிக்குமாறு தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளது.

நூல் நிலையம் இல்லாத பாடசாலைகள், சிறிய அளவிலாவது இதனை ஆரம்பித்து மாணவர்கள் ஆசிரியர்களின் கல்வித் தரத்தினையும், வாசிப்புப் பழக்கத்தையும் ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஆசிரியர் ஒன்றியம் கேட்டுள்ளது.

மாணவர்கள் மூலமோ, பொது ஸ்தாபனங்கள் மூலமோ நூல்களைச் சேகரித்து திலீபன் நினைவு நாட்களில் ஒரு தினத்தில் பாடசாலை நூலகங்களை அமைக்க உதவுமாறு சகல கோட்ட நிர்வாகப் பொறுப்பாளர்கள், கொத்தணி, பாடசாலைப் பிரதிநிதிகள் ஆகியோரும் கேட்கப்பட்டுள்ளனர். [அ]

## ஈழ அகதிமுகாம்களை இடம் மாற்றுவதற்கு முடிவு

சென்னை, செப். 22

தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி முகாம்களை, பாதுகாப்புக் கருதி மாநிலத்தின் உட்பகுதிகளுக்கு இடமாற்றம் செய்ய மாநில அரசு தீர்மானித்துள்ளது.

அகதிகள் மறுவாழ்வுத் துறை விசேட ஆணையாளர் திரு. கெ. எம். இராம்தாஸ் இத்தகவலை நாகபட்டினத்தில் வைத்து செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

## தொண்டர் படையினருக்கும் இனிமேல் ஓய்வூதியம்!

முப்படைகளையும் சேர்ந்த தொண்டர் சேவைகளில் பணிபுரிந்து இளைப்பாறும் சகல தரப்பினரும் இனிமேல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவர்.

—இவ்வாறு அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

## சட்டமா அதிபரின் ஆலோசனையை சபாநாயகர் ஏற்க வேண்டியதில்லை

### சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, செப். 22

ஜனாதிபதிக்கு சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனையை, சபாநாயகர் ஏற்று நடக்க வேண்டியதில்லை.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்.

நாடாளுமன்றக் குண்டு வெடிப்பு வழக்கு தோற்றதற்குக் காரணம் சட்டமா அதிபர் வழங்கிய தவறான ஆலோசனையேயாகும் —

ஜனாதிபதிக்கு சட்டமா அதிபர் இப்போது வழங்கிய ஆலோசனையும் அது போன்றதே. இது சட்டமா அதிபர் ஜனாதிபதிக்குக் கொடுத்த கயிறாகவும் இருக்கலாம் — என்றும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

திரு. வாசுதேவ நாணயக்கார பேசியதாவது;

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டத்தை நிறைவேற்றியதற்கு அவர் (சிறிமா) அவசரகாலச் சட்டத்தை நீடித்ததே காரணம் எனக் கூறப்பட்டது.

இன்று அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை காரணமாக ஜனாதிபதி பிரேமதாசா குடியுரிமையை மட்டுமல்ல, தனது அரசியல் எதிர்காலத்தையே இழக்கப்போகிறார். வெகுவிரைவில் இந்த நாட்டில் நாடாளுமன்ற ஜனநாயகமுறை மீண்டும் தோன்றும் — என்றார். [அ-எ]

### எண்ணெய் வித்துக்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

ஆமணக்கு, வேம்பு, இலுப்பை, எள்ளு போன்ற எண்ணெய் வித்துக்கள் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்பட உள்ளன.

இந்த வித்துக்களை சேகரிக்கக் கூடியோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்திடமோ அல்லது உற்பத்திக் குழுக்களிடமோ அவற்றைக் கொடுத்து அதற்கான பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

### 'தராசு'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் கூட, இந்தத் தாக்குதலில் தமிழக அமைச்சர் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் பற்றிய ஆரம்ப விசாரணைகள் நடைபெற்ற காலத்தில், விடுதலைப் புலிகள் தான் இத்தாக்குதலை நடத்தினார்கள் என்று சென்னைப் பத்திரிகைகளும், பொலீஸ் வட்டாரங்களும் கருத்து வெளியிட்டு இருந்ததமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-த)

### வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், வடமதுரை மற்றும் சாணல்பட்டி ஆகிய இடங்களில் பொலீஸார் சோதனை நடத்திய போது 292 ஜெலடின் குச்சிகள், 613 மின்சார வெடிக்க வைக்கும் கருவிகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழகத்திற்கான
# பட்டப்படிப்புகள்
(முற்றிலும் பல்கலைக்கழக வசதிகள் கொண்ட ஒரே நிறுவனம்)

**G. A. Q.** (8-00 — 5-00)
**1st In COM.** (8-00 — 5-00)

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன!
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன!

பேராதனை விரிவுரைகள் 05 - 10 - 1991
8 - 00 மணி

பகல் நேர விரிவுரைகள் (G.A.Q. — 1st IN COM ) ஆரம்பமாகவுள்ளன.

பெயர்கள் முன் கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும்.

மு. குறிப்பு (விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளராலும், பட்டப்படிப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களாலும் ஒருங்கிணைந்து போதிக்கப் படும்.)

*The College of Higher Studies,*
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
[ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமை] [சி-0549]

---

யாழ்ப்பாண
அத்தியட்சாதீன தென் இந்திய திருச்சபை
அமெரிக்க இலங்கை மிஷன்
## 175 ஆவது ஆண்டு விழா
(1816 — 1991)
செப்டெம்பர் 23 திங்கட்கிழமை

அன்புடையீர்!
எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெற இருக்கின்ற அமெரிக்க இலங்கை மிஷனின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களுக்கு நீங்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

### நிகழ்ச்சி நிரல்

8-30 நன்றி செலுத்தும் திருவிருந்து ஆராதனை
ஆசன ஆலயம், வட்டுக்கோட்டை

11-00 மிஷன் கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும்
ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

2 30 பொதுக் கூட்டம்
ஆசன ஆலயம், வட்டுக்கோட்டை.

அருட்திரு. அ. ஜெயக்குமாரன்
செயலாளர்,
அமெரிக்க இலங்கை மிஷன்,
யாழ். அத்தியட்சாதீன தென் இந்திய திருச்சபை.
[சி-0531]

---

## O/L மாதாந்த பயிற்சிப் பரீட்சை
மற்றும்
## இலவச கருத்தரங்கு
[ஒவ்வொரு பௌர்ணமி (போயா) தினங்களிலும்]

அனேக மாணவர்கள், பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க மாதாந்த பயிற்சிப் பரீட்சையை 23 - 09 - 91 முதல் மீண்டும் ஆரம்பிக்கிறோம்,

23 - 09 - 1991 திங்கள் (போயாதினம்)

| முற்பகல் – பரீட்சை | பிற்பகல் – கருத்தரங்கு |
|---|---|
| 8 - 00 கணிதம் | 1 - 00 கணிதம் |
| 9 - 00 விஞ்ஞானம் | 2 - 00 விஞ்ஞானம் |
| 10 - 00 தமிழ் | 3 - 00 தமிழ் |
| 11 - 00 சமூகக்கல்வி | 4 - 00 சமூகக்கல்வி |

★ இப்பாடங்களுக்கான பகுதி ii இற்குரிய மாதிரி வினாத்தாள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப் படுவது அனைவரும் அறிந்ததே.

BOND புத்தக நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4306]

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 19 — 11 — 1969



தாயக மண்ணில்: 07 — 08 — 1991

### மேஜர் ஜொனி
(நாகநாதி ஜெகதீஸ்வரன்)
(முன்னாள் கிளி/கிழக்குப் பிரதேசப் பொறுப்பாளர்)

களம் பல கண்டனை ஜெனி
கலக்கினாய் எதிரியை சுற்றிலே
ஆனையிறவில் மாவீரம் ஆனவனே
மாய உடல் மறைந்திட
கூடி நின்ற புலிகளுக்கும் கூறி நின்றோம்
அஞ்சலிகள்.

மீசாலை வடக்கு, கொடிகாமம்.
உற்றார், உறவினர்கள்.
(4309)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 10 — 6 — 1916



இறப்பு: 23 — 8 — 1991

### மார்க்கண்டு ஆலாலசுந்தரம்
(சாரதி)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தவம் இல்லம்
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.
[18215]

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 1967 — 09 — 19



மறைவு: 1991 — 06 — 25

### செல்வி குமாரசாமி தர்சனா
(ஆசிரியை, பளை கொத்தணி)

தர்சனா!
எங்கள் தெருக்களில் உந்தன் காலடி
எங்கள் மனங்களில் உந்தன் மந்திரப் புன்னகை
எங்கள் விழிகளிலோ உந்தன் முகவொளி - நீ
நேற்றுவரை எங்களுடன் வாழ்ந்தவள்
இன்றோ எங்களினுள் வாழ்கின்றவள்.

தர்மக்கேணி,
பளை.
அம்மா, அப்பா,
சகோதர, சகோதரிகள்.
(18211)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## றேடியன்ற் கல்வி நிலையம்,
புங்கன்குளம், அரியாலை.

பொருளியல் - திரு. உதயன்
92 வரவு - செலவுத் திட்டம்
ஆரம்பம்: 24 - 09 - 1991
(18217) காலை 6-15 மணி

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானப்பூங்கோதை

வல்வெட்டி வேவில் புதுப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், குரும்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி ஞானப் பூங்கோதை கணேசாமிக் குருக்கள் (21-09-91) நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேவிலைச் சேர்ந்த வைத்திலிங்கக் குருக்கள் செல்லமுத்து தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற திரு. கணேசாமிக் குருக்களின் அன்பு மனைவியும், திருமதி சி. கமலாஜினியின் அன்புத் தாயாரும், திரு. சிவானந்தராஜாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கெருடாவில் பத்மநாதக் குருக்களின் இல்லத்தில் (22-09-91) இன்று காலை நடைபெறும்.

தகவல்:
சிவானந்தராஜா
(மருமகன்)
(17933)

---

## செல்வன் சற்குணலிங்கம் அனுஷன்
(கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை 5 ஆம் ஆண்டு மாணவன்)

கொக்குவில் பூநாறிமரத்தடியைச் சேர்ந்த செல்வன் சற்குணலிங்கம் அனுஷன் 21-9-91 இல் காலமானார்.

இவர் சற்குணலிங்கம் [தபாலதிபர், யாழ்ப்பாணம்], றோஸ் மார்க்கிரட் [இளைப்பாறிய தொலைபேசி இயக்குனர், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மகனும், ஆஷாப் பிரியா [கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவி] யின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இ. நாகலிங்கம், திருமதி சற்குணவதி நாகலிங்கம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை [22-9-91] மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூநாறிமரத்தடி,
கொக்குவில்.
நா. சற்குணலிங்கம்
(தந்தை)
[17932]

---

## வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை
(துப்பாக்கி திருத்துனர்)

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விசுவலிங்கம் (மரக்காலை) யின் அன்புச் சகோதரரும், தங்கமணி, Dr. சிவானந்தன் (அட்டக்கலம்பண்ண), தங்கதேசம், சவுந்தரம், முத்துலஷ்மி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற கனகரத்தினம், நேசமணி, துரைரெத்தினம், கந்தசாமி, தவேந்திரன் ஆகியோரின் மாமனாரும், நேரு, வாசுகி, வினோபா, சுகந்தி, முரளி, மோகன், சுமதி, சிவநாதன், கருநாதன், சுரேந்திரநாதன், பிரபாகர், மந்தளா, யோகலிங்கம், ஜெயக்குமார் ஆகியோரின் பேரனும் ஜனனி, நிரேஷ்கண்ணா, ரமேஸ்கண்ணா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (21 - 09 - 91) நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: து. நேரு.
சங்கத்தானை.
(17929)

---

## வீரவேங்கை தம்பி
(பாலசுப்பிரமணியம் தேவராசா)

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற நேரடி மோதலில் 19 - 09 - 1991 இல் வீரமரணமடைந்தார்.

அன்னார் திரு. க. பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற புனிதவதி ஆகியோரின் ஏக புதல்வனும், எஸ். கே. இலங்காபதி [வர்த்தகர் மல்லாகம்], எஸ். கே. அம்பிகாபதி [சவூதி] ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி சத்தியவதி சோமசுந்தரம், திருமதி நல்லகுணவதி தில்லையம்பலம், திருமதி தர்மகுணவதி கனகரட்ணம் [தேவிபுரம்] ஆகியோரின் அன்பு பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் 20 - 09 -1991 இல் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
எஸ். கே. இலங்காபதி
[தாய்மாமன்]
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
[18222]